மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் பிள்ளைகள் என்ற முறையில் முன்னுரிமை வழங்குவது என்பது சட்டப்படியும், வேறு சில நியாயத்தின்படியும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்காது என்றுதான் அரசு கருதுகிறது. ஆனால் பணியில் இருக்கிறபோது இறந்து விடுகிற அப்படிப்பட்ட ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு குறைந்தபட்சம் ஆசிரியர் பயிற்சி பெற்ற தகுதி இருக்குமானால் அவர்களுக்கு உடனடியாக வேலை வழங்க இந்த அரசு முன்வந்திருக்கிறது. ஆனால் ஆசிரியர் அல்லாத வேறு வேலைக்கு அவர்கள் விண்ணப்பிப்பார்களேயானால், ஆசிரியர் பயிற்சித் தகுதி இல்லாதவர்களாக இருப்பார்களேயானால், அந்தப் பணியிடங்கள் மிகவும் குறைவாக இருப்பதால் அந்தந்தப் பணிகளில் உடனடியாக அவர்கள் நியமிக்கப்பட முடியவில்லை. எனவே இறந்துபோன ஆசிரியர்களுக்கு என்று உள்ள சலுகையை ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு என்று வழங்குவது எளிதல்ல.

தேன்கனிக்கோட்டா வட்ட தலைநகரில் நீதிமன்றம் ஏற்படுத்துதல்

***8125. திரு. டி. சி. விஜயேந்திரய்யா :**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தருமபுரி மாவட்டம், தேன்கனிக் கோட்டா வட்ட தலைநகரில் நீதிமன்றம் ஏற்படுத்த அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கை எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே,

தருமபுரி மாவட்டம், தேன்கனிக்கோட்டையில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு உயர் நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது.

9-15 மணி

திரு. டி. சி. விஜயேந்திரய்யா : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, ஏற்கெனவே தேன்கனிக்கோட்டைசப் தாலுக்காவாக இருந்தது. அப்போது அங்கே 'தேர்ட் க்ளாஸ்' மாஜிஸ்ட்ரேட் கோர்ட் நடந்துகொண்டிருந்தது. ஆனால் ஜுடிசியரி செப்பரேட்டாக ஆனதற்குப்பிறகு தனித்தாலுக்காவில் மட்டும் இயங்கவேண்டும் என்று, அங்கே இருந்த 'தேர்ட் க்ளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்-ஐ எடுத்துவிட்டார்கள். அது தனித் தாலுக்காவாக கடந்த 25 வருடங்களாக இயங்கி வருகிறது. இருந்தாலும் இது வரையில் பல முறை கேட்டும் இதே மாதிரி அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்கிறார்களே தவிர அதை ஏற்படுத்தவில்லை.

1991 சனவரி 22]

அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவில் இந்த வருடத்திலேயே இதைக் கொண்டுவர ஏற்பாடு செய்வார்களா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் தேன்கனிக் கோட்டையில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைப்பதற்கான செயற்குறிப்பு உயர் நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருப்பதாகவும் அது தொடர்பாக உயர்நீதிமன்றம் விரைவில் முடிவான பதிலை அனுப்புவதாகவும் 1990 ஆம் ஆண்டு மே மாதத்தில் தெரிவித்து இருக்கிறது. மேலே குறிப்பிடப்பட்ட செயற்குறிப்பு உயர்நீதி மன்றத்திடமிருந்து வரப்பெற்றதும் அது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். அப்போது மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. சி. விஜயேந்திரய்யா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது பல விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தாலுகாவாக அமைக்கப் பட்ட பிறகு அங்கே மாஜிஸ்ட்ரேட் கோர்ட் கட்டப்பட வேண்டும் என்று சொல்லும் இடத்தில் ஒரு கூடம், இருக்கிறது, அதிலே தேவையான பொருட்கள் என்ன வேண்டுமென்றாலும் அந்த ஊர்ப் பொது மக்கள் கொடுக்கத் தயாராக இருப்பதாக எவ்வளவோ மனுக்கள் கொடுத்திருக்கிறோம். ஆனால் இது வரையில் எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. எனவே அதற்குத் தகுந்த ஏற்பாடு செய்ய முடியுமா என்று கேட்டுக்கொள்ளவிரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி முடிவான கருத்து தெரிவிக்க வேண்டியது உயர்நீதி மன்றம். உயர்நீதிமன்றம் தன்னுடைய கருத்தை மே மாதத்தில் அனுப்புவதாகத் தெரி வித்து இருக்கிறார்கள். அவர்களிடத்திலே மீண்டும் வலியுறுத்தி உடனடியாக பதிலைப் பெற்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் அங்கே இருக்கின்ற வசதிகளை வைத்துக்கொண்டு அந்த உயர்நீதிமன்றம் அமைப்பதற்கான செயற்குறிப்பின்மீது நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கான முயற்சியை அரசு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேன்கனிக்கோட்டை போன்று தமிழகத்தில் எத்தனை தாலுக்கா தலைநகரங்களில் நீதிமன்றங்கள் இல்லாமல் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுகுறித்துத் தனியாகக் கேள்வி போட்டால் விவரம் தரலாம்.

திரு. அ. வே. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டை, வட்ட தலை நகராகக் கடந்த 15 ஆண்டுகளாகச் செயல்பட்டுக் கொண்டு வந்தாலும் அங்கே குற்றவியல் நீதிமன்றம்தான் செயல்பட்டு வருகிறது; உரிமையியல் நீதிமன்றம் இல்லை என்று பொதுமக்களிடமிருந்து அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளது. எனவே அங்கே உரிமையியல் நீதிமன்றம் அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டையைப் பொறுத்த வரையில் தனியாகக் கேள்வி போட்டால் விவரம் தரலாம். ஆயினும் உளுந்தூர்பேட்டையைப் பொறுத்த வரையில் ஏற்கெனவே அது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

உதகமண்டலத்தில் நீதிமன்ற வளாகம் கட்டுதல்.

*9355—திரு. எச். எம். ராஜு :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

உதகமண்டலத்தில் எல்லா நீதிமன்றங்களும் ஒரே கட்டிடத்தில் செயல்படும் வகையில் நீதிமன்ற வளாகம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, உதகமண்டலத்தில் ஆங்கிலேயர்கள் ஆட்சிக் காலத்தில் இருந்த , நூற்றாண்டு கடந்த ஒரு மிகவும் பழைய கட்டடத்தில் சார்நீதி மன்றம் இயங்கி வந்த இடத்திலே தற்போது மாவட்ட நீதி மன்றமும், உரிமை இயல் நீதி மன்றமும் போதிய வசதிகள் இல்லாமல் இயங்கி வந்துகொண்டிருக்கிறது. மேலும் குற்றவியல் நீதிமன்றம் ஒன்று ஒரு பழங்காலக் கட்டடத்தில் அரை கிலோ மீட்டர் தூரத்தில் இயங்கி வருகிறது. தற்போது தாவாக்களும் குற்றங்களும் அதிகரித்து வருவதாலும் மாவட்ட மக்களுக்கு பயன்படும் வகையில் எல்லா நீதி மன்றங்களும் ஒரே கட்டடத்தில் தக்க வசதிகளுடன் செயல்படும் வகையில் நீதிமன்ற வளாகம் ஒன்று இந்த ஆண்டில் அரசு நிறுவ முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

9-20 மணி.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தசைவரவர்களே, உதகமண்டலத்தில் ஒருங்கிணை த நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்காக நிலம் கையகப்படுத்தும் செயற் குறிப்பை அரசு பரிசிலித்தது. இதற்